# கனடா – காரை கலாச்சார மன்றம்
# Canada - Karai Cultural Association

A non-profit corporate body in Ontario-Reg. No: 1100492

PO BOX. 32057 MILLIKEN CROSSING PO MARKHAM, ON, M1V-0E1 Tel: 416.642.4912

E-mail: karainagar@gmail.com www.karainagar.com



**President**
Mr.Paramanantharajah Thambiayah
(416) 642 4912 / (416) 400 3198

**Secretary**
Mr.Jeyachandran Thambirajah
(416) 642 4912 / (647) 867 5392

**Assistant Secretary**
Mr.P.Theesan Thiravianathan

**Treasurer**
Mr. Perinparajah Thirunavukarasu
(416) 642 4912 / (416) 258 5365

**Assistant Treasurer**
Mr.Umaipakan Kanagendram

**Committee Members:**
Mr.Kumaresan Kanagasabai
Mr.Ari Manoharan
Mr.Uruthiralingam Thambiah
Mr.Sothilingam Ganeshapillai

**Patron Committee**
Mr.Kanagarajah Kandiah

**Auditor**
Mr.Sivaramalingam Sivasubramaniam


திரு. இராசதுரை ரவீந்திரன்
முன்னாள் தலைவர், கனடா காரை கலாச்சார மன்றம்

அன்புடையீர்,

கனடா காரை கலாச்சார மன்றத்தின் தற்போதைய நிர்வாகம் நடைமுறை வங்கி கணக்கு இன்றி தற்பொழுது இயங்கி வருகின்றது அறியத்தக்கது. கடந்த நிர்வாக சபையினை தலைமையேற்று நிர்வகித்து வந்ததுடன், மன்றத்தின் வங்கி கணக்கிற்கு கையொப்பம் இடுவதற்கு தகுதி வாய்ந்தவர்களில் ஒருவரான தாங்கள் இதுவரை வங்கி கணக்கினை முறையே தற்போதைய நிர்வாக சபையினரிடம் கையளிக்க தவறியுள்ளீர்கள்.

தங்களதும் தங்கள் நிர்வாக சபையின் செயலாளராக பதவி வகித்த திரு.கணேசன் பாலசுப்பிரமணியம் மற்றும் பொருளாளராக பதவி வகித்த திரு.பரமசிவம் தர்மலிங்கம் ஆகியோரது கையொப்பம் இன்றி வங்கி கணக்கினை தற்போதைய நிர்வாக சபையினர் நடைமுறைப்படுத்த முடியாதளவில் தங்களால் வங்கிக்கு தடைபிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல மாதகாலமாக வங்கிக் கணக்கினை தங்களிடம் இருந்து சுமூகமாக பெற்றுக்கொள்ள எடுத்த நடவடிக்கைகள் எவையும் பலனளிக்காத நிலையில் மன்றத்தின் அங்கத்தவர்களிடமும், மன்றத்தின் அனுசரணையாளர்களிடமும் தற்போதைய நிர்வாக சபையினர் கருத்துக்களை பெற்றுக்கொள்ளவும், சம்பந்தப்பட்ட தங்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தங்களிற்கு முறையே மன்றத்தின் ஊடாக இமெயில்கள் வாயிலாக அனுப்பப்பட்ட கடிதங்களிற்கு பதிலளிக்க தவறிய நிலையிலும், அங்கத்தவர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் கலந்து கொண்டு 04.03.2017 அன்று நடாத்தப்பட்ட கருத்து பரிமாற்றத்தின் போதும் தாங்கள் கலந்து கொள்ள தவறிய நிலையில் இறுதி முயற்சியாக இக்கடிதம் தங்களிற்கு அனுப்பப்படுகின்றது.

மன்றத்தின் நல்லெண்ணம், தங்களின் கடந்த கால தலைமைப்பதவி என்பவற்றை கருத்திற்கொண்டு எவ்வித நிபந்தனைகளும் அற்ற வகையில் உடனடியாக மன்றத்தின் நடைமுறை வங்கிக்கணக்கினை தற்போதைய நிர்வாக சபையினர் நடைமுறைப்படுத்தும் வகையில் தங்களது நிர்வாக சபையில் கையொப்பம் இட தகுதி வாய்ந்த அனைவரது ஒத்துழைப்பினையும் பெற்று மன்றத்தின் வங்கிக் கணக்கினை தற்போதைய நிர்வாகத்திடம் கையளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கனடா – காரை கலாச்சார மன்றம்

**Canada - Karai Cultural Association**

A non-profit corporate body in Ontario-Reg. No: 1100492

PO BOX. 32057 MILLIKEN CROSSING PO MARKHAM, ON, M1V-0E1 Tel: 416.642.4912

E-mail: karainagar@gmail.com www.karainagar.com



**President**
Mr.Paramananth arajah Thambiayah
(416) 642 4912 / (416) 400 3198

**Secretary**
Mr.Jeyachandran Thambirajah
(416) 642 4912 / (647) 867 5392

**Assistant Secretary**
Mr.P.Theesan Thiravianathan

**Treasurer**
Mr. Perinparajah Thirunavukarasu
(416) 642 4912 / (416) 258 5365

**Assistant Treasurer**
Mr.Umaipakan Kanagendram

**Committee Members:**
Mr.Kumaresan Kanagasabai
Mr.Ari Manoharan
Mr.Uruthiralingam Thambiah
Mr.Sothilingam Ganeshapillai

**Patron Committee**
Mr.Kanagarajah Kandiah

**Auditor**
Mr.Sivaramalingam Sivasubramaniam


(முதலாம் பக்க தொடர்ச்சி...)

மன்றத்தின் அங்கத்தவர்கள் மற்றும் அனுசரணையாளர்கள் கலந்துரையாடலின் போதும், மேலும் மன்றத்தின் வளர்ச்சி கருதிய இலை மறை காய்களாக இருந்து செயற்படும் அங்கத்தவர்கள் மற்றும் கல்விமான்களின் கருத்துக்களின் அடிப்படையில் தற்போதைய நிர்வாக சபையினரால் மேற்கொண்டு வங்கிக் கணக்கினை தற்போதைய நிர்வாக சபையினரிடம் கையளிக்க தவறும் பட்சத்தில் முதற்கண் கனடா காரை கலாசார மன்றத்தின் யாப்பின் பிரகாரம் தங்களிற்கும் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிற்கும் மன்றத்தின் நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதுடன் தொடர்ந்து கனடிய சட்ட விதிமுறைகளிற்கு அமைய சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஆயத்தங்கள் செய்யப்படும்.

மன்றத்தின் நல்லெண்ணம் தங்களின் கடந்த கால நிர்வாக செயற்பாடுகளை கருத்தில் கொண்டு இதுபோன்ற அசம்பாவித சம்பவங்கள் இடம்பெறாமல் மன்றத்தின் வங்கிக் கணக்கினை தற்போதைய நிர்வாக சபையின் நடைமுறைக்கு ஏற்றவகையில் கையளிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடனும் இவ்வேண்டுகோளினை தங்களிற்கு 11.03.2017 அன்று கூடிய நிர்வாக சபையின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் அனுப்பி வைக்கின்றோம்.

எனவே 22.03.2017க்கு முன்னர் வங்கிக்கணக்கினை சுமூகமான முறையில் தற்போதைய நிர்வாக சபையினர் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுப்பீர்கள் என நம்புகின்றோம்.

அத்துடன் கடந்த பல மாதங்களாக தங்களிற்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் மற்றும் இன்று இறுதியாக தங்களிற்கு அனுப்பப்படும் இவ்வேண்டுகோள்களிற்கு முறையே கடந்தகால நிர்வாக சபை தலைவர் என்ற முறையில் பதிலளிக்க தவறும் பட்சத்தில் மன்றத்தின் அங்கத்தவர்கள், அனுசரணையாளர்கள் மற்றும் நலன்விரும்பிகளிற்கு மன்றத்தின் இணையத்தளம் ஊடாக இதுதொடர்பான விளக்கம் தற்போதைய நிர்வாக சபையினரால் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் அறிவிக்கப்படும் என்பதனையும் தாழ்மையுடன் தங்களிற்கு அறியத்தருகின்றோம்.

நன்றி

நிர்வாகம்
கனடா காரை கலாச்சார மன்றம்
15.03.2017